**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No. 183/2021** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.1 | |
| **Name:** | லதா | **Caste** |
| **Father's Name** | சுப்பிரமணியன் | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 41 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 16.09.2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை**

1) எதிரி ரவிச்சந்திரனை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 10 ஆண்டுகளாக. எதிரி பக்கத்து வீட்டில் இருந்ததாக நான் கூறுவது எங்கு வசித்தோம் என்றால் காரைக்குடி சாலையில். வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அசல் மனுவில் உள்ள முகவரிக்கு தான் அனுப்பினோம் என்றால் சரிதான். எனக்கு எதிர்மனுதாரர் அனுப்பிய பதில் அறிவிப்பானது நான் அந்த முகவரியில் வசிக்கவில்லை என திருப்பி அனுப்பப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. எதிரியிடமிருந்து என்னுடைய வழக்கறிஞரிக்கு பதிலறிவிப்பானது வந்ததா என்றால் வந்தது. பதிலறிவிப்பு விபரங்களை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அசல் மனு தாக்கல் செய்வதற்கு முன்பே பதிலறிவிப்பானது பெறப்பட்ட நிலையில் அதனை அசல் மனுவுடன் தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் தற்போது சாட்சி பதிலறிவிப்பு ஏதும் வரவில்லை என கூறுகிறார்.

2) என்னிடம் காட்டப்படும் பதிலறிவிப்பினை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அஞ்சல ஒப்புதலில் என்னுடைய வழக்கறிஞர் கையொப்பம் செய்ததாக உள்ளதா என்றால் உள்ளது. பதிலறிவிப்பு கொடுக்கப்பட்டு 10 நாட்கள் சென்றுதான் அசல் மனு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. வழக்கு தாக்கல் மனுவினை நான் முழுமையாக படித்து பார்த்தேன் என்றால் சரிதான். அசல் மனுவில் எதிர்மனுதாரர் பதிலறிவிப்பு அனுப்பியதாக இல்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் காசோலை அளித்து பணம் பெறாததால்தான் எதிர்மனுதாரர் அளித்த பதிலறிவிப்பினை மறைத்து அசல் மனுவானது தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பதிலறிவிப்பினை தாக்கல் செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் தான் பதிலறிவிப்பைனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய உறவினர் ஆன சிதம்பரம், கோமதி ஆசிரியையை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் மாதா கோவில் தெருவில் வசித்தேன் என்றால் இல்லை.

3) மனு அசல் காசோலையானது 2014ம் ஆண்டு அவர்க்கு வழங்கப்பட்ட காசோலை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வங்கியில் வாடிக்கையாளர்க்கு அளிக்கப்படும் காசோலை புத்தகத்தினை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவ்வாறு வழங்கப்படும் காசோலை புத்தகத்தில் காசோலையை யார் யார்க்கு வழங்கினோம் என்பதற்கு குறிப்புகள் எழுதுவதற்கு இடம் இருக்கும் என்றால் சரிதான். எதிரி காசோலை புத்தக்கத்தில் காசோலை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அறந்தாங்கி மாதா கோவிலில் உள்ள சிதம்பரத்திற்கு வழங்கியதாக குறிப்பு உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 2014ம் ஆண்டு நட்பு ரீதியாக எதிரி அசல் வழக்கு காசோலையை சிதம்பரத்திற்கு வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி பதிலறிவிப்பினை இன்றைய தேதி வரை படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

4) பதிலறிப்பில் எதிரி வழக்கு காசோலையை எனக்கு அளிக்கவில்லை என தெளிவாக கூறியுள்ளார் என்றாலும், அதனை தெரிந்து கொண்டுதான் நான் பதிலறிவிப்பினை படிக்கவில்லை என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சமூகம் நீதிமன்றத்தில் நான் எத்தனை காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 வழக்குகள். நான் வேலை பார்க்கிறேனா என்றால் இல்லை. விவசாய வேலை செய்கிறேன். டெய்லரிங் வேலை செய்கிறேன். மாத வருமானம் எனக்கு எவ்வளவு என்றால் மாதம் ரூ.2,00,000/- வரும். ஆண்டுக்கு ரூ.24,00,000/- வரும் என்றால் சரிதான். நான் வருமான வரி கட்ட கடப்பாடு உள்ளது என்றால் விவசாயத்தொழில் என்பதால் கட்டுவது இல்லை. எனது வங்கி சராசரி இருப்பு எவ்வளவு என்றால் ரூ.5,00,000/- இருக்கும். எத்தனை வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் 2 வங்கியில்.

5) இவ்வழக்கின் காசோலை கணக்கானது எந்த வங்கி என்றால் அறந்தாங்கி கனரா வங்கி. எதிரிக்கு வழங்கிய தொகையானது எப்போது வங்கியிலிருந்து எடுத்தேன் என்றால் 5 மாதங்கள் இருக்கும். 5 மாத வங்கி கணக்கினை பார்த்தால் இம்மனுவின் தொகையானது எடுக்கப்பட்டுள்ளதா என்பது தெரியவரும் என்றால் சரிதான். ஒரே தவனையாக எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 2, 3 தவனையாக எடுக்கப்பட்டது. எவ்வளவு இடைவேளியில் எடுக்கப்பட்டது என்றால் ஒவ்வொரு தவணைக்கும் 1 மாத இடைவெளியில். என்னுடைய அறந்தாங்கி கனரா வங்கி கணக்கு புத்தகத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 யார் எழுதியது என்றால் எதிரி. தற்போது சாட்சி வங்கி பணியாளர்கள் எழுதி கொடுத்தாக கூறுகிறார். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 அசல் காசோலையை யார் எழுதியது என்றால் எதிரி. காசோலையில் கையொப்பம் தமிழிலும் விபரம் ஆங்கிலத்திலும் உள்ளது என்றால் சரிதான்.

6) எதிரி ஆசிரியர் என்பதாலும் அவர் தமிழில் தான் எழுதி கொடுக்கும் வழக்கம் உள்ளவர் என்பதால் எதிரி எழுதி கொடுக்கவில்லை என்றால் அவர்தான் எழுதிகொடுத்தார். 2014 அன்று பெறப்பட்ட காசோலையினை எதிரி எனக்கு 2021ல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலையை எதிரி அளித்த சிதம்பரத்தினை சாட்சியாக அழைத்து விசாரணை செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். காசோலை தொகையினை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல. வேறு காசோலை மற்றும் வழக்கு காசோலையை எதிரி தொகை ஏதும் பெற்று எனக்கு தரவில்லை என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது பொய்யானது என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் காசோலை மோசடி ஏதும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.